M. 1630 MAY 1922.

சுயப்பிரகாசத்துணை.

# ஞானசூரியன்

இது ஒரு சிறந்த மாதாந்த தமிழ்ப் பத்திரிகை.

# GNANA SURIYAN

A HIGH CLASS TAMIL MONTHLY.


| மலர் 1 | துந்துபி-ௌ வைகாசி-மீ 1உ<br>1922-ௌ மே-மீ 14உ | இதழ் 2 |
|---|---|---|

Vol 1     பொருளடக்கம்.     No. 2



| விஷயம். | பக்கம். |
|---|---|
| கடவுள்வணக்கம் | 25 |
| நமது கடமை | 26 |
| கடவுளியல் | 30 |
| இராஜயோகம் | 33 |
| சாதன சதுட்டயம் | 35 |
| சுகாதாரம் ... | 38 |
| நட்பு ... ... | 40 |
| ஞானசூரியன் வாழ்த்துப்பா ... ... | 41 |
| கவிமா விளக்கம் ... | 43 |
| கதை ... ... | 47 |

# "ஞான சூரியன்"

## சந்தா விபரம்.

| | | |
|---|---|---|
| இந்தியா, பர்மா, சிலோன் முதலிய இடங்களுக்கு | வருடம் 1-க்கு தபால்கூலி உள்பட | ரூ 1—8—0 |
| பினங்கு, சிங்கப்பூர் முதலிய வெளி நாடுகளுக்கு | | ரூ 2—0—0 |
| தனி சஞ்சிகை விலை | | ரூ 0—3—0 |

மாதிரிப் பிரதி வேண்டுவோர் 4 அணு ஸ்டாம்பு அனுப்பி பெற்றுக் கொள்ளலாம்.

சந்தாதாரருக்கு:—சந்தா நம்பரைக்குறித்து எழுதினாலன்றி கடிதங்களுக்கு விடை யளிக்கப்படமாட்டாது.

சந்தாதாரராய்ச் சேரவிரும்புவோர் வி. பி. யிலனுப்பும்படி ஆர்டர்செய்யலாமெனினும் முன் பணம் அனுப்பி விடுவதே உத்தமம். அப்படிச்செய்தால் ஆலசியமின்றி சஞ்சிகை வந்துசேரும். முதல் சஞ்சிகையிலிருந்து விஷயங்கள் தொடர்ச்சியாய் எழுதப்பட்டு வருவதால் யாவரும் ஆரம்பத்திலிருந்தே சேர்ந்து வருகிறார்கள். சந்தா தொகை ரூ. 1—8—0 சித்திரை-மீ முதல் பங்குனி-மீ வரையில் கணக்கு வைத்துக்கொள்ளப்படும். இடையில் சந்தாதாரராய்ச் சேருகிற மாதம் முதற்கொண்டு ஒருவருஷம் கணக்கிடப்படமாட்டாது. தங்கள் கடிதங்களுக்கு பதில் விரும்புவோர் ரிப்ளை கார்டு எழுதவேண்டும். அல்லது லேபிளாவது அனுப்பவேண்டும்.

---

## விளம்பர விகிதம்.

| | | | |
|---|---|---|---|
| ஒரு பக்கத்திற்கு ஒருமாசத்திற்கு | | ... | ரூபா 10—0—0 |
| அரை பக்கத்திற்கு | ,, | ... | ,, 6—0—0 |
| கால் பக்கத்திற்கு | ,, | ... | ,, 3—8—0 |

மொத்தமாய் ஒரு வருடத்திற்கு ஒப்பந்தம் செய்துகொண்டால் மொத்தத் தொகையில் 100-க்கு $12\frac{1}{2}$ ரூ. வீதம் கழித்து வாங்கப்படும். எப்போதும் முழுதொகையை முன்பணமாயனுப்பவேண்டும்.

---

## விஷயங்கள்.

1. கடிதக்காரர்கள் அபிப்பிராயங்களுக்கு பத்திரிகாசிரியர் பொறுப்பாளியல்லர்.

2. விஷயம் அனுப்புவோர் கடிதத்தின் ஒரே பக்கத்தில் இங்கியால் தெளிவாய் எழுதியனுப்பினாலன்றி, அவ்விஷயங்கள் கவனிக்கப்படமாட்டா.

3. விஷயங்களை திருத்தவும், அவற்றில் கூட்டவும், குறைக்கவும், அவற்றை வெளியிடவும் வெளியிடாமலே விட்டுவிடவும் பத்திரிகாசிரியருக்கு பூரண சுதந்திரமுண்டு.

பத்திராதிபர்.

ஸ்ரீ கருணையானந்த மஸ்தான் சுவாமிகள் திருவாய் மலர்ந்தருளியதும், மனிதராகப்பிறந்த ஒவ்வொருவரும் அவசியம் வாசிக்கவேண்டிய யோக ஞான வசனசாஸ்திரமுமாகிய யோகரகசியம்

முழுப[illegible]தகம் 1-க்கு ரூ. 2—0—0.

கருணையானந்த மஸ்தான் சுவாமிகள்,

பத்திராதிபர், ஞானசூரியன் ஆபீஸ்,

விஜயபுரம், திருவாரூர்.

சுயம்பிரகாசத் துணை.

# ஞான சூரியன்.

இது ஒரு சிறந்த மாதாந்தத் தமிழ்ப் பத்திரிகை.

தோட்டனைத் தூறு மணற்கேணி மாந்தற்குக்
கற்றனைத் தூறும் அறிவு (தமிழ் வேதம்)

(All Rights Reserved.)

| மலர் 1 | துந்துபி-ஷு வைகாசிமீ 1உ<br>1922-ஷு மே-மீ 14உ | இதழ் 2 |
|---|---|---|

## கடவுள் வணக்கம்.

தேனெனத் தமிழ்சொல் கருணையானந்த
தேசிக வுட்சிதா காய
ஞானசூ ரியன்வந் துதித்தொளி விரிப்ப
நானிலத் துதித்தமா னிடர்கள்
நானெனு மகந்தைக் காரிருட் படலம்
நலிந்தவ ருளமலர் விரியச்
சோனைபோ லருள்செய் சுயம்பிர காசச்
சோதியைப் போதெலாந் தொழுவாம்.

(பத்திரிகாசிரியர்.)

பெருவெளியா யைம்பூதம் பிறப்பிடமாய்ப் பேசாத
பெரிய மோனம்
வருமிடமாய் மனமாதிக் கெட்டாத பேரின்ப
மயமாய் ஞானக்
குருவருளாற் காட்டிடவும் அன்பரைக்கோ தறவிழுங்கிக்
கொண்டப் பாலுந்
தெரிவரிதாய்க் கலந்ததெந்தப் பொருளந்தப் பொருளினை
சிந்தை செய்வாம் [யாஞ்

க. (தாயுமானவள்ளல்).

# ஞானசூரியன்.

துந்துபி-௵ வைகாசி-௴ 1௳

## நமது கடமை.

நமது கடமை என்பதில் நாம் நம்முடைய விஷயத்தில் செய்துகொள்ளவேண்டிய கடமை இன்னதென்றும் நாம் பிறர் விஷயத்தில் அதாவது மாதா, பிதா, குரு, தெய்வம், மனைவி, மக்கள், பந்து, மித்திரர்கள் ஏழைகள், தேசத்தார் முதலானவர்களுக்குச் செய்யவேண்டிய கடமை இன்னவையென்றும் இருவகையாகும். அவற்றுள் :—நாம் நமது விஷயத்தில் செய்துகொள்ளவேண்டிய கடமைகளையே முதன்முதல் அவசியம் செய்துகொண்டு அதன் பின்னர் ஏனையோருக்குச் செய்யவேண்டிய கடமைகளைச் செய்ய முயலவேண்டும். ஏனெனில்

"வருமுன்றற் காவாதான் வாழ்க்கை எரிமுன்னர்
வைத்தூறு போலக் கெடும்"

என்று நமது தெய்வப்புலவர் வசனமும், தனக்குப்போய்த்தான தருமம் என்று பழமொழியும் இருக்கின்றன. இதைப்பற்றி ஒரு சிறிய கதையுண்டு அது பின்வருமாறு :—

ஒரு பிரபுவின் காரியஸ்தன், தான் அதிக சிரத்தையோடு வேலைபார்த்து வருகிறேனென்பதை அந்தப்பிரபு அறிந்துகொள்வதற்காக வெகுநாள் சவரம் செய்துகொள்ளாமலேயிருந்தான். அவ்விதமான நாட்களுள் ஒருநாள் அவன் எஜமான் அவனைச் சந்தித்தபோது அவனைநோக்கி நீர் ஏன் தாடி, மீசை, தலைமயிருடன் மஹரிஷிகளைப் போலிருக்கிறீர்? உமது மனைவி கர்ப்பிணியாயிருக்கின்றனளா? காரணம் யாது? என வினவினர். அதற்கவன் எஜமானே! தங்கள் வேலையைப்பார்ப்பதற்கு நேரம் சரியாக இருக்கிறதேயன்றி எனக்கு அவகாசம் ஏற்படவில்லையென்று தன்மேல் திருப்தியுண்டாகும் விதமாகக் கூறினான். அதைக்கேட்ட பிரபு நீர் தன்வேலையைச் சரிவரச்செய்துகொள்ள முடியாதபோது பிறர்வேலையை எங்ஙனஞ்செய்ய வல்லவராவீர்

எனக்கூறி அவனைத் தன்வேலையிலிருந்து நீக்கிவிட்டனரென்பது கர்ணபரம்பரை.

அதுபோல் மனிதனாகப் பிறந்ததின் பயன் என்ன? என்றுணர்ந்து தான் செய்யவேண்டிய கடமைகளைச் செய்யமுடியாதவனைக் கடவுளென்னும் எஜமானானவர் மனிதப்பிறவி என்னும் உயர்ந்த உத்தியோகத்திலிருந்து நீக்கிவிடுவர் என்பது தாற்பரியம். நாம் நமது விஷயத்தில் செய்துகொள்ளும் கடமையிலும் சரீரத்தைப்பற்றியதென்றும் ஆன்மாவைப்பற்றியதென்றும் இருவகை.

ஆன்மாவென்னும் எஜமான் வசிப்பதற்கு அநுகூலமாகிய வீடுபோன்ற நமது சரீரத்தை உணவு, உடை முதலியவற்றைக் கொண்டும் பிணி முதலாகிய துன்பங்கள் வாராமலும் காத்துக் கொள்ளவேண்டும். ஏனெனில் "சுவர்நிலைத்தன்றோ! சித்திரம் எழுதவேணும்" என்பது கவனிக்கத்தக்கதே. இவ்விதமாக நாம் நமது கடமையைமட்டும் செய்வதோடு போய்விடாமல் நமது சந்ததியார்களும் நன்மையடையும் பொருட்டு சுக துக்கங்களைப் பாராட்டாமல் பாடுபட முன்வரவேண்டும்.

நாம் நமதுகடமையை மட்டும் முடித்துக்கொண்டு மற்றவர்கள் எப்படிப்போனால்தான் நமக்கென்னவென்று சில கல்லுளிச் சித்தர்கள் சொல்வதேயன்றி ஜீவகாருண்யமுடைய மஹான்கள் அவ்வாறு செய்வதில்லை.

இஸ்லாம் மதஸ்தாபகராகிய முகம்மது நபிநாயகம் அவர்கள் ஆரம்பத்தில் அபூஜகில் முதலிய எழுதலைவர்களுடைய சங்கடத்துக்காக மக்கத்தை விட்டு மதீனத்துக்குப் புறப்பட்டும், அப்படி புறப்படும்போது வழியில் ஷை எழுவர்களால் அநேக இடையூறுகள்நேர அவற்றிற்கெல்லாம் தப்பித்தும், இருட்டு அமாவாசையில் பூரணச்சந்திரனை அழைத்தும், தசைக்கட்டியைப் பெண்ணுருவாக அமைத்தும் இன்னம் எண்ணிறந்த அற்புதங்களையெல்லாம் செய்தது போதாதென்று ஆத்மலாபத்திற்கு நேர் வழியைக்காண்பிப்பதற்குத் தகுதியான நாலாவது (குர்ஆன் ஷரீபு) வேதத்தையும் விளக்கமாக்கி ஜனங்களைச் சீர்திருத்தஞ் செய்தது ஜனங்களின் பிரதியுபகாரத்தைக் கருதியா?

சைவசமயமானது சமண முனிவர்களால் மாறுதலடையுந் தறுவாயில் அதைச் சீர்திருத்துவதற்காக திருஞானசம்பந்தர் மதுரைமாநகரஞ்செல்ல எத்தனிக்கையில் சில பண்டித சிகாமணிகள் வந்து நின்று வணங்கி சுவாமி! இன்று நாள் நல்லதாக இல்லை மற்றொருநாளில் புறப்படலாம் என்று பிரார்த்திக்க

"ஞாயிறு திங்கள் செவ்வாய், புதனுடன் வியாழன் வெள்ளி
சனி, பாம்பிரண்டு முடனே
ஆசறு நல்ல நல்லஅவை நல்ல நல்ல"

என்னும் பாசுரத்தைக்கூறி மறுத்துவிட்டு உடனே மதுரைக்குப் புறப்பட்டுப்போய் பாண்டியனது சுர முதலான வியாதிகளை நிவர்த்தித்து சமணர்களது கொட்டத்தை அடக்கி வைகையில் ஏட்டை எதிர்த்துவரும்படிச்செய்து அனைவரையுஞ் சைவசமயத்தினராகச் செய்தது பிரதியுபகாரத்தைக் குறித்தா?

இராசகுமாரனாகிய சித்தார்த்தர் என்னும் கௌதம புத்திரர் இராச்சியபாரத்தை ஒழித்து சந்நியாசந்தாங்கி உலகத்திற்கு போதிக்கவந்ததுதான் என்ன காரணம்? ஆதலால் கல்வி அறிவு உபசாந்தமுடையவர்கள் உலகத்தில் தலையிட்டுக்கொள்வது இவ்வுலகத்திலுள்ள கோணலை நிமிர்த்தவேயாம். அவர்களே இவ்வுலகத்தின் நடவடிக்கைகளை எண்ணி அஞ்சுவார்களாகில் கேவலம் இவ்வுலகவாழ்வையே சதமென நினைந்து உன்னுடையது என்னுடையது என்று விவகார பாணந்தொடுத்துக்கொண்டிருக்கிற சாமானியர்கள் எவ்விதம் இவ்வுலகத்தைச் சீர்திருத்த முடியும்? அவர்கள் சுயநலப் புலியாயிருப்பதால், நீதி என்னும் கண்குருடாயிருக்குமே! குருடர்களை வழி நடத்துபவனும் அவர்களுக்கு வைத்தியம் செய்பவனும் கண்ணுள்ளவனல்லவா? அதுபோல் இவ்வுலக இயல்பையும் அதற்கு வேறான தம் இயல்பையும் உணர்ந்தவர்களே இவ்வுலகின் நன்மைக்குப் பாடுபடும் கடமைபூண்டவர்கள். அவ்வாறு நன்மை செய்யாமலிருக்க அவர்களால் முடியாது. ஏன்? ஒரு குழந்தை தவறிக் கீழேவிழும் சமயத்தில அதைத் தூக்காமலிருக்க எந்தக் கல்நெஞ்சுள்ளவனால் தான்முடியும்! அதுபோல் இவ்வுலகத்தாரின் கஷ்டநஷ்டங்களை

உள்ளபடி உணரும் காருண்யமுடையவர்கள் பார்த்துவிட்டு மௌனமாயிருப்பார்களா?

பிணத்தின்மேல் எத்தனை வண்டிகள் ஏறிச்சென்றாலும் அந்த உடலுக்கு எப்படி வருத்தமில்லையோ, அதுபோல் நம்முடையதல்லவென்று ஒதுக்கிய இந்த உடலும் உள்ளமும் இந்த உலகத்தாரின் உபகாரத்தின் பொருட்டு எவ்வளவு வருந்தினாலும் ஞானிக்கு சிறிதும் கவலையில்லை. அவர்கள் உழைப்புக்கும் பயப்படார்; எவ்வித துன்பத்துக்கும் பயப்படார்.

நீதி நெறி விளக்கம்.

மெய்வருத்தம் பாரார் பசிநோக்கார் கண்துஞ்சார்
எவ்வெவர் தீமையு மேற்கொள்ளார்—செவ்வி
அருமையும் பாரா ரவமதிப்புங் கொள்ளார்
கருமமே கண்ணாயினர்.

இப்போது நாம் செய்யவேண்டிய கடமையுளொன்றாகிய "ஞானசூரியன்" என்னும் பத்திரிகையை ஆரம்பித்து நடத்தி வருகிறோம். அதற்கு கல்விமான்களும் அன்பர்களும் தான் சந்தாதாரராகச் சேர்ந்ததுடன் தன்னுடைய நண்பர்களையும்சந்தாதாரராகச்சேர்த்து உதவிசெய்துவருகிறார்கள் சில அறிவில்லாத பேதைகள் ஞானசூரியன் என்பது என்ன சாக்கு? அது பலம் விலை என்ன என்று பிதற்றுகிறார்கள். இப்படிப் பிதற்றுகிறவர்கள் தனக்கு அதனுண்மை தெரியாமல் பிதற்றிவிட்டாலும் குற்றமில்லை தெரிந்தே சிலர் பரிகாசம் செய்கின்றனர் இதற்காகத்தான் நமது குணங்குடிமஸ்தான் அவர்கள்

... ... ... ....ஞானம்
படியாரெல்லா மென்னைப் பழித்தால் பழித்துக்கொண்டு
பகைத்தால் பகைத்துக்கொண்டு சாகட்டும்—அந்தக்
... ... ... குணங்
குடிகொண்டா லென்னுயிர்க் குயிர்தான் (மீசை)

எனத் திருவாய் மலர்ந்ததுபோல் நாமும் அவர்களை இகழ்ந்துவிட்டுப்போய்விட மனம் வரவில்லை. கண்ணில்லாதவன் வந்து முட்டிவிட்டால் கண்ணுடையவன் கோபித்துக்கொள்ளாமல் அவனுக்கு வழியைக் காண்பிக்கவேண்டியது அவன்கடமையாதலால் எழுத எழுத விரிவாகுமென்றஞ்சி அதை விட்டுவிட்டு அத்

தகையோருக்கு இனியாவது நற்புத்தியைக் கொடுக்கும்படி கடவுளைப் பிரார்த்தித்து நமது "ஞானசூரியன்" பத்திரிகைக்கு மாதம் 1-க்கு 2 அணு வீதம் அதாவது வருடம் 1-க்கு சந்தா ரூ 1—8—0 ஆக ஏற்படுத்தியிருப்பது நேயர்கள் அறிந்ததேயாம். இதற்கு இவ்வளவு குறைந்த சந்தாவாக ஏற்படுத்தியதை மகா ஜனங்கள் உணர்ந்து எனக்கு உனக்கு என்று (ரயில்வேஸ்டேஷனில் டிக்கட்டு வாங்குவதுபோல்) நமது ஞானசூரியனை வாங்கினலல்லவா நமக்கும் உற்சாகம் ஏற்பட்டு ஜனங்களுக்குச்செய்ய வேண்டிய கடமைகளைச் சரிவரச்செய்யமுடியும். இப்படிப் பல பத்திரிகைகளை எழுத முன்வந்திருப்பவர்களுக்கு ஜனங்கள் உற்சாகம் உண்டாக்காத குறைவினுலேயே அநேகபத்திரிகைகள் தலைகாட்டி மறைந்துபோயின. ஆகையால் நமது மகா ஜனங்களே! நீங்கள் நமது ஞானசூரியனை வாங்கி வாசித்து உங்கள் அஞ்ஞான அந்தகாரம் நீங்கப்பெற்று மெஞ்ஞானப்பிரபை வீசத் தொடங்கி நீங்கள் ஆத்மலாபம் பெறமுன்வாருங்கள்! இது உங்கள் முக்கிய கடமையுமொன்ருகும்.

பத்திராதிபர்.

## கடவுளியல்.

(16-ம் பக்கத்தொடர்ச்சி).

சூரியகிரணமும், காற்றும் சஞ்சரிக்காத இடங்களிருப்பினும், இருக்கலாம். கடவுளின் வியாபகத்திற்கு அன்னியமோ ஒன்றுமேயில்லை. இதுபற்றியே" அங்கிங்கெனுதபடி எங்கும் பிரகாசமாய் ஆனந்தபூர்த்தியாகி" என்றனர் தாயுமானவள்ளல்

கடவுள், கண்ணின்றிக் காண்பவர், காதின்றிக் கேட்பவர் அவர் காணுதகாட்சியும், கேளாதகேள்வியும், அவர் அறியாத விஷயமும் இல்லவே இல்லை. அதுபற்றி, அவர் ஆணையை மீறிக் குற்றஞ்செய்வதும், அவரையறியாமற் செய்துவிட்டோமென்று நினைப்பதும், அவரை வணங்காதிருப்பதும், பெரும்பிழை.

கடவுள் வணக்கமே மோட்சவீட்டின் திறவுகோல்-பாவக் கடலைக் கடக்கும் மரக்கலம், அஞ்ஞான இருளைத்தவிர்க்கும் மெய்ஞ்ஞான சூரியோதயம், ஆபத்சகாயம் என்பதை மறவாமல் நினைந்து, தினந்தோறும் நாம் படுக்கையை விட்டு எழுந்தவுடன் கடவுளைத் தொழுதல்வேண்டும். இதுபற்றியே முஹம்மதியர் கள் அதிகாலையிலேயே (பஜர்) தொழுதுமுடிக்கின்றனர். வைதிக முடைய ஏனையவர்களும் அவ்வாறே புரிகின்றனர். காலை நேரத் தில் மனமும் நாடிகளும் தெளிவாகவும் பரிசுத்தமாகவும் இருக் கும். அதனால் மறந்துபோன விஷயங்கள் காலைவேளையில் ஞாபகத்திற்கு வருவதை ஒவ்வொருவரும் தத்தம் அநுபவத்தில் அறியலாம்.

தொழும்போது நமது மனத்தை இதர விஷயத்தில் செலுத்தாமல், "ஒருமையுடன் நினது திரு மலரடி நினைக்கின்ற உத்தமர்தம் உறவு வேண்டும்," என்று இராமலிங்கவள்ளல் திரு வாய் மலர்ந்தருளிய கருத்தின்படி ஏகாக்கிரச்சித்தமாகக் கடவுள் ஒருவரையே சிந்தித்து, இதற்குமுன் அறிந்தும் அறியாமலும் நாம் செய்த பாவங்களை மன்னிக்கவேண்டுமென்றும், இனிமேல் அப்படிப் பாவஞ்செய்யாமலிருக்கும் வண்ணம் தம்மைக் காத்து நல்லறிவைக் கொடுக்கவேண்டுமென்றும், அன்பும் அச்சமும் பொருந்தி தாழ்மையோடு அவரைப் பிரார்த்திக்கவேண்டும். சோம்பலினால் வணங்காமலிருந்துவிடக்கூடாது. சிலர் அவரை வணங்குவதற்குச் சரியானபடி கற்கவில்லையென்று அசட்டை செய்கிறார்கள். சரியானபடி கற்றுக்கொள்ளும் வரையினும் அவரவர்களுக்குத்தெரிந்தபடி, "எப்பரிசாயினும் ஈசனைப் போற்று மின்! அப்பரிசீசன் அருள்புரிவானே" என்ற திருமந்திரக் கருத்தின்படி எவ்விதமாகவேனும் வணங்கவேண்டுமேயன்றி காலாதீதமாய் ஆலசியமாக இருந்துவிடக்கூடாது. கல்லாதவர்களே அவ்வாறு வணங்கவேண்டுமென்ற நியமமிருக்க நன்கு கற்றவர்கள் கடவுளை வணங்காதிருப்பின், அவர்களைப் போல் கற்றறிமூடர்கள் உலகத்தில் வேறு இல்லவேயில்லை.

இக்கற்றறிமூடர்களினும், கல்லாதவர்கள் பல்லாயிரமடங்கு சிறந்தவர்கள் என்பதற்குப் பிரமேயமேயின்று.

கல்லாத பேர்களே நல்லவர்கள் நல்லவர்கள்
கற்றுமறிவில்லாத என் கன்மத்தை என்சொல்வேன், எனவும்
கற்றதனலாய பயனென் கொல் வாலறிவன்
நற்றாள் தொழா அரெனின் எனவும்

ஆன்றோர்கள் கூறிய கருத்தும் இதுவே.

ஒரு காரியத்தைப் புதிதாகச்செய்ய ஆரம்பிக்கும்போதும் கடவுளைப் பிரார்த்திப்பதால் பலவித நன்மைகளும் எடுத்த காரியத்தைச் சுலபமாகவும் நன்றாகவும் இனிதுசெய்து முடிக்கும் வல்லமையும் உண்டாகும். "அவனருள் அற்றால் அனைவரும் அற்றார், அவனருள் உற்றால் அனைவரும் உற்றார்" என்னும் பழமொழியின்படி நமக்குப் பலருடைய உதவியும் கிடைக்கும்.

கடவுளைத் தொழுவதற்கு ஒருகாலம் தக்கதென்பதும் ஒரு காலம் தகாதென்பதும் இல்லவேயில்லை ஆயினும் மேற்கூறியபடி சூரியோதயத்தில் நித்திரை நீங்கி யெழுகையில் மனம் நிர்மலமாக தெளிவு பெற்றிருப்பது யாவருக்கும் சுபாவமாகையால் அருணோதயகாலமே அதற்குச்சிறந்ததாக இருக்கின்றது. சிலர் வைதீகமும் வேதாந்தமும் 60, 70 வயதுக்குமேல் அனுட்டிக்க வேண்டுவதேயன்றி இளமையில் அனுட்டிக்கப் படாதென்று எண்ணுகிறார்கள். அந்த முதுமைப்பருவம் வருமளவும் உயிரோடிருப்பது நிச்சயமில்லை என்பதை அறியார்கள்போலும்.

நெருந லுளனொருவன் இன்றில்லை யென்னும்
பெருமை யுடைத்திவ் வுலகு.
இன்றைக்கிருந்தாரை நாளைக்கிருப்பரென்
றெண்ணவோ திடமில்லையே

ஆகையால் இளமையாகிய இந்தப்பருவமே சிறந்த பருவமென்றெண்ணி அவரை வணங்கவேண்டும்.

காலையில் தொழுவதுபோலவே மாலையிலும் படுக்கும்போதும் ஏனையசமயங்களினும் அவரைப்பிரார்த்திக்கவேண்டும். இவ்வாறு ஆயுள்பரியந்தம் செய்துவருவோமாயின், நாம் எல்லா நன்மைகளும் பெற்றுய்வது திண்ணம்! திண்ணம்!!

வேதாந்தபாஸ்கரன், (தொடரும்)

## இராசயோகம்.

(22-ம் பக்கத் தொடர்ச்சி.)

சித்தநிரோதமாகிய இராசயோகமின்றிப் பின்னால் கூறப் பெற்றுள்ள மகாமுத்திரை முதலிய நவமுத்திரைகளும் ஏனைய அப்பியாசங்களும் சோபிக்கமாட்டா. சித்தநிரோதம் இல்லாத வனுக்குச் சாந்தியில்லை. சாந்தி இல்லாதவனுக்குச் சுகமில்லை. சுகம் இல்லாதவனுக்கு என்ன பதவியிருப்பினும் துக்கசாகரமே யாம்.

இதைப்பற்றி எனது ஞானபிதாவாகிய புலவர் நாயகம் ஸ்ரீ-ல-ஸ்ரீ அப்துர்றகுமான் சாகிபு ஒலியுல்லா அவர்கள் சொன்ன தாவது, "பணம்படைத்தவர்கள் எல்லாரும் பிரபுக்கள் அல்லர்; கூலிவேலைசெய்து பிழைக்கும் பஞ்சமர் முதலியவர்களும், பிச்சைக்காரர்களுமே அநேகமாகப் பிரபுக்கள்". ஏனெனில் பணம் படைத்தவர்களிற் பலருக்கு எந்நேரமும், இதை அப்படிச்செய்யவேண்டும்! அதை இப்படிச்செய்யவேண்டும்! என்று பகலெல்லாம் ஓயாவிசாரமும்; இரவில் எங்கே கள்ளர்கள் வந்துவிடுவார்களோ! பணங்களெல்லாம் போய்விடுமே! என்று திருடர்கள் வருவதுபோலவும், தன்னையும் தனதுமனைவியையும் கட்டிவைத்து விட்டுப் பணத்தையெல்லாம் எடுத்துகொண்டு போவதுபோலவும் சொப்பனுவஸ்தையுண்டாகித் திகிலடைந்து தூக்கம் வராமல் சரீரம் வெளுத்துப் பிணியால் வருந்துதலும் அடைவார்கள். அன்றியும், ஏழையெளியவர்களுக்குத் தான தருமஞ்செய்யவில்லையேயென்று பலபேர் நிந்திப்பார்கள் அதிகாரிகள் பிய்த்துப் பிடுங்கித்தின்ன வட்டமிட்டு சூழ்வார்கள். இன்னும் அளவிறந்த அல்லல் வலையிலகப்பட்டு எப்போதுஞ் சுகம் போன்ற துக்கசாகரத்திலேயே அமிழ்ந்து வருந்துவார்கள்.

குணங்குடி வள்ளல்.

"கெட்டமனத்தையுடைய எருமைக்
 கிடாவினைப்போலவு முண்டோ—காசைக்
கட்டிப்புதைத்துக் கடைசியில் சாகின்ற
 கழுதைகட்கும் பலனுண்டோ—சுத்த
மட்டிப்பயல்கள் மனதைக்கலக்க
 மருந்துகள் மாத்திரையுண்டோ".

நீதி வெண்பா.

இன்னல்தரும் பொருளை யீட்டுதலுந் துன்பமே
பின்னதனைப் பேணுதலுந் துன்பமே—அன்ன
தழித்தலுந் துன்பமே அந்தோ! பிறர்பால்
இழத்தலுந் துன்பமே யாம்.

எளியவனே! கால்ரூபாய் சம்பாதிக்கவேண்டியதற்கு அரை ரூபாய் சம்பாதித்து விட்டானேயானல், அன்று அவன்வீடு கலியாண வீடுபோல் குதூகலம் அடைந்திருக்கும். இரவில் வியாகூலமே கிடையாது. நமது ஆண்டை (எசமான்) இருக்கிற வரையில் நமக்கு எவ்விதத்திலும் குறைவில்லையென்று ஒரே எண்ணத்துடன் இருப்பான். ஆகையால் உள்ளதே போதுமென்னும் மனோசாந்தியுள்ளவர்களும் எளியவர்களும் பள்ளு பறைகளுமாகிய விசாரமற்றவர்களே பிரபுக்கள். இதைப்பற்றி ஒரு ஒரு சிறியகதை உண்டு:—

ஒரு மனிதன் வயிற்றுவலியால் அதிக தொந்தரவடைந்தான். அதற்கு கண்ட கண்ட வைத்தியரிடமெல்லாம் மருந்து வாங்கிச்சாப்பிட்டும் குணமடையாமலே இருந்தான். முடிவில், நரைத்துப் பழுத்த ஒரு வைத்தியரிடம்போய், அந்த வியாதிக்கு மருந்துகேட்டான் அதற்கு அவர், 'இங்கிருந்து மேற்கே நான்கு கடிகைதூரத்தில் என் தமயனார் இருக்கின்றனர் அவரிடம் போனால் மருந்துகிடைக்கும்' என்றனுப்பினர். அவன் அவ்வாறே போய்க்கண்டு மருந்துகேட்டான். அவரும் நரைத்துப்பழுத்துப் போய் இருந்ததுமன்றி, முன்னவர் கூறியபடியே 'இங்கிருந்து மேற்கே நான்குகடிகை தூரத்தில் எனது தமயனார் இருக்கின்றார் அவரிடம் போனால் நிச்சயமாய் மருந்துகிடைக்கும்' என்றனுப்பினர். அவர் கூறியபடியே சென்று அவரைக்கண்டு மருந்து வாங்கிப்புசித்தான். ஆனால் அவர் மேற்கூறிய இருவர்களுக்கும் தமையனாக வயதில் மூத்திருந்தும், 25-வயதுடைய வாலிபனைப் போலக்காணப்பட்டார். அதை அவன் கண்டு ஆச்சரியமடைந்து ஐயா! தங்கள் இளையசகோதரர்கள் விருத்தாப்பியரைப் போலிருக்கத் தாங்கள் மாத்திரம் திடகாத்திரமாய் இருக்கக் காரணம்யாது? எனக்கேட்கப் பின்வருமாறு கூறுகின்றார்:—

"நீர் முதன்முதல் கண்ட எனது தம்பி மகா யோக்கியன், அவனுடைய மனைவியோ திருடுவதில் மகாசமர்த்தி. அதனால் எங்கே திருட்டு போனாலும் இவள்பேரிலேயே சந்தேகந் தோன்றிச் சச்சரவுகள்நேரிடும். அந்த வழக்கைத் தீர்த்துவிடு வதே அவனுக்கு எப்போதும் வேலை. அன்றியும், இவளா! நமக்கு மனைவியாகவந்து வாய்க்கவேண்டும் என்கிற விசனத்தால் நரைத்துப் பழுத்துப்போனான். (வரும்.)

## சாதன சதுட்டயம்.

### 17-ம் பக்கத் தொடர்ச்சி.

உபரதி :—இது (ஆசையைவிட்டு நீங்குதல்) அதாவது தன்னுடைய குடும்பவிவகாரங்களை சுருங்கச்செய்தல் எவ்வாறெனில் இரவும் பகலும் பற்பல வீண் யோசனைகளையே சிந்தித்து ‡ ஆண்டிகள்கூடி மடங்கட்டுவதற்குப் பேசிமுடிப்பதுபோல் சாப்பிடக்கூட நேரமில்லாதபடி அலையாமலும், வெளியிலிருந்து வீட்டுக்குவந்தோம், தனக்கு உசிதமாகத்தெரிந்தபடி கடவுளை வணங்கினோம், சாப்பிட்டோம், இரவில் மறுபடியும் கடவுளைச் சிந்தித்துக்கொண்டு சயனித்தோம் என்று நடந்துகொள்ள வேண்டுமேயன்றி ஆடுவந்ததா? மாடுவந்ததா? பொம்மன் வந்தானா? திம்மன் வந்தானா? என்று அட்டகாசஞ்செய்து புலம்பாமலும் நிராசையோடிருத்தல்.

---

‡ ஆண்டிகள் கூடி மடங்கட்டுவதாவது :—ஆண்டிகள் பல திசைகளிலிருந்துவந்து பகற்காலத்தில் வெய்யிலுக்கும், இராக்காலத்தில் சயனிப்பதற்கும் மடத்தில் வந்து தங்குவார்கள். தங்கியிருக்கிறவரையில், இந்த மடத்தை அப்படிக் கட்டிமுடிக்கவேண்டும் இப்படிக் கட்டிமுடிக்கவேண்டுமென்று வாய்க்குப்பிடித்த கேடாகப் பேசிவிட்டுப் பொழுது விடிந்தவுடன் ஒருவர்போன திசை ஒருவர்க்கு தெரியாமல் பிச்சையெடுக்கப் போய்விடுவார்கள். மறுநாள் இரவிலும் வந்து கூடி முன்போலவே பேசுவார்கள். இப்படி பல நாளும் பிதற்றுவதேயன்றி, மடத்தையொருபோதும் கட்டி முடிப்பதில்லை. அதுபோலவே பிரபஞ்சத்தவர்கள், இத்தனைநாளைக் கிருப்போம், இன்னார் முந்திசாவார்கள் என்கிற நிச்சயம் தெரியாமல், அறுக்கப்போகிறவரையிலும் ஆடு அசைப்போட்டுக்கொண்டிருப்பதுபோல் மரணம் சமீபித்திருக்கும்போதும், கடவுளை வணங்காமல் வீணான கருமங்களையும், சம்பாஷணைகளையும், செய்து பிதற்றிக்கொண்டிருத்தல்,

"ஒருபொழுதும் வாழ்வதறியார் கருதுப
கோடியுமல்லபல" குறள்.

திதிட்சை :—இது சகித்தலென்னும் பொறுமை. அதாவது வாழ்வுவந்தாலும் மகிழ்ந்து துள்ளாமல் தாழ்வு வந்தாலும் சலித்துக்கொள்ளாமல், சர்வ சுகதுக்கங்களும் கடவுள் கட்டளையின்படி வருவனவேயன்றி தானாக வரமாட்டாது என்றெண்ணி, சுக துக்கங்களே ! வாருங்கள் ! நீங்கள் உங்கள் சுயேச்சையாக வரவில்லை என்பது எனக்குத்தெரியும் ஆதலால் என்னிடத்தில் நீங்கள் சுகமாய் வாழலாம் என்ற அபிப்பிராயத்துடன் சமமாக எண்ணிப் பொறுமையோடு அனுபவித்தல்.

சமாதானம் :—இது சற்குருமூர்த்தியினிடத்திலும், ஏனைய நல்லோர்களிடத்திலும் மனமகிழ்ந்து உவந்துகேட்ட உபநிடதமாகிய வேதாந்த சிரவணார்த்தங்களைச் சதாகாலமும் மனதானது அதையே இனிய தொழிலாகச் சிந்தித்துக்கொண்டிருக்கும்படி செய்தல்.

சிரத்தை :—இது குருமூர்த்தியிடத்திலும், அவரது வாக்கியங்களிலும், வேதாந்த சாஸ்திரங்களிலும், அவற்றின் பதப் பிரயோகங்களிலும் அதிக நம்பிக்கை விசுவாசம் வைத்திருத்தல்.

### 4 முமுட்சுத்துவம்.

முமுட்சுத்துவம் என்பது ஐக்கிய முத்தியை விரும்புகிற பேராசை. அதாவது § தத்துவம் அசி யென்னும் வாக்கியார்த்தப்படி நான் எப்போது காண்பானுங் காட்சியுமாகிய திருக்குதிரிசியமென்னும் ஞாதுருஞானஞேயங்களற்று, அது நான் என்கிற சுட்டிறந்த பரிபூரண சாட்சாத்காரத்தில் அபேதமறச் சீவப்பிரமைக்கிய விதேகமுத்திபெறுவேன் என்று ஓயாவிசாரத்தில் அழுந்திநிற்றல்.

கைவல்லியநவநீதம்.

சாதனமின்றி ஒன்றைச் சாதிப்பார் உலகிலில்லை
ஆதலால் இந்தநான்கும் அடைந்தவர்க் கறிவுண்டாகும்
நாதன விவேகி யுள்ளம் நுழையாது நுழையுமாகில்
பூதசன்மங்கள் கோடி புனிதனும் புருடனாமே.

சாதனசதுட்டயமாகிய போனவித்து, சஞ்சரிகிதமாகிய சித்த சுத்தமுடைய மனமென்னும் பூமியில், நித்தியாநித்தியவஸ்து

விவேகம் என்னும் பெயருடன் முளைக்கும். இகபரங்களில் உபரதி பெற்று விகசிதமாகும். சமாதி சட்க சம்பத்து என்னும் ஆறு கிளைகளுடன் செழித்தோங்கி வளர்ந்து மோட்ச விருப்பமென்னும் ஞானமணி விளைந்த மாதுரியமான அழகியகனிகளைக் கொடுக்கும்,

மேற்கூறிய நான்கு சாதனங்களும் ஞானமென்னும் மணிமண்டபத்திற்கு ஏறிச்செல்வதற்கு சோபானம் (படிக்கட்டு) களைப்போல் ஒன்றுக்கொன்று சகாயமுடையவைகள். முதற்படியாகிய நித்தியா நித்தியவஸ்து விவேகம் எய்தியபின் இகபர போக விராகம் சித்திக்கும். அதன்பின் சமாதி சட்க சம்பத்து சித்திக்கும். அதன்பின் முமூட்சுத்துவம் எய்தும். இந்தச் சாதன சதுட்டயநெறிப்படி நடக்காதவர்கள் ஞானமார்க்கத்துக்குத் தகுதியுடையவர்களல்லர். இதை அப்பியாசிப்பவர்கள் ஒவ்வொருநாளும் நாம் சாதனசதுட்டய விதிவிலக்குப்படி நடந்து வருகிறோமாவென்று கவனித்துவரவேண்டும். அப்படி நடந்துகொண்டபின், சற்குருமூர்த்தியை யடைந்து அவர்களுக்கு நம்மீது கிருபை யுண்டாகும்படி, மனம், வாக்கு, காயங்களால் தொண்டுசெய்து மனதுவந்து உபதேசித்தருளியபின் நிட்டை சாதிக்க முயலவேண்டும்.

விஞ்ஞானசாரம்

இந்த நான்குசாதனமும் இல்லாதவர்கட் கொருக்காலும்
அந்த ஞானம் வெளியாகா தங்கி நயனமொடு தோன்றிப்
பந்த மறவேயுரைத்திடினும் பாழுக்கிறைத்த நீரொக்கும்
முந்த நான்குசாதனமும் முத்தியடைவோர்க் குறவேண்டும்.

இந்நேர் நெறியிற் சாதனங்கள் இவை நான்கினும் வந்தெய்தியதேல்
தந்நேர் குரவன் றனையடைந்து சாற்றுஞ் சிட்டாசாரமுறை
அந்நேர் பிசகா தேவல்புரிந் தருள்தன் மீதிற் சுரப்பளவும்
பின்னேதிர்ந்தும் அவர்கொடுக்கப் பெறவே வேண்டும் விஞ்ஞானம்,

இதுவே நான்கு சாதனமும் இயல்பாயுடையோ ரெய்துநெறி
இதுவேயென்று மாறாத இருளின் திமிரைத் தானறுக்கும்
இதுவே ஞானானந்தரசம் இரமிக்கச்செய்யும் விஞ்ஞானம்
இதுவே உனக்கும் உறுதியென இசைத்தானென்னை யாளருளுமையே.

(வரும்).

## சுகாதாரம்.

நோயற்றவாழ்வே குறைவற்ற செல்வம் என்னும் நமது ஆன்ரோர்களின் பழமொழியை அனுசரித்து நாம் இவ்வுலகில் உயிரோடிருக்கும் வரையில் நோயில்லாமல் ஆரோக திடகாத்திர ராக இருக்கவேண்டியது அத்தியாவசியம். வியாதியுடையவர்கள் செய்யும் எவ்வித முயற்சியும் பயன் படாமற் போகும். ஏனெனில், சித்திரம் எழுதுவோன் சுவரை வன்மையாகவும் மழ மழப்பாகவும் வைத்துக்கொள்ளாவிட்டால் அவனது வேலைத் திறம் நன்கு விளங்காது. ஆதலின் நமது அருமையான சரீரத் தையும் சுகமாக வைத்துக்கொள்வதற்கு பற்பல விதிகளுண்டு. அவற்றைகவனியாமல் அசட்டையாக இருப்போமாயின் நாளடை வில் பற்பல பிணியுற்று வலிமை குன்றி நாசமடைவதே நிச்சயம்.

இப்பிறவி நாசமடைந்தால் பின் எப்பிறவிதான் கிடைக்கு மென்ற நியதியுமில்லை. அதனால் மோக்ஷத்தை யடைவதென்ற உறுதியுமில்லையே. ஆதலால் கிடைத்தற்கரிய இப்பிறவியையே பொன்போற் போற்றிவருதலவசியமன்றோ! அவ்வாறு பாது காத்தற்கு பற்பல வகையுளவேனும் அவற்றுள் அதிமுக்கிய மானதை இங்கே விவரிப்போம்.

ஒவ்வொருநாளும் அதிகாலையில் அதாவது விடிவதற்கு ஐந்து நாழிகைக்குமுன் படுக்கையைவிட்டெழுந்து தன் முழு முதற்கடவுளை மனமாரத் துதித்து வணங்கிய பின்னர் வெளியே போய் மலஜலம் கழித்து பின்னர் முறையே கைகால் சுத்தம் செய்துகொண்டு ஆல், கருவேல், முதலியவற்றால் பல் துலக்கி வாய்கொப்பளித்தல்வேண்டும். அஃதன்றி தற்கால நவீன நாகரிகத்தின் பயனாக பிரஷ்கொண்டு அதிமெதுவான பற்பொடி யினால் வெளிக்கு டம்பமாக பல்துலக்குவதால் வெகு சீக்கிரத்தில் பற்களிடையிலுள்ள ஈறு கரைந்து சொத்தை முதலிய வுண்டாகி பற்கள் அசைவுண்டாகி விழுந்துவிடுகிறதென்பது வெள்ளிடை என்பது மற்றியன்றோ. ஆலும் வேலும் பல்லுக்குறுதி யென்றார் ஆன்றோர். பிராதக்கால ஸ்நானம் தேகத்திற்கு சுறுசுறுப்பையும்,

இரத்தவிர்த்தியையும் யுண்டுபண்ணுவதோடு, படுத்திருக்கும் போது நித்திரையில் மயிர்க்கால்கள்வழியாக தேகத்தினின்று கழிந்தனவெல்லாம் தேய்த்துக்குளிப்பதால் எடுபட்டுப்போய் சுத்தமாயிருக்கும். இல்லாவிடில் அவைகள் காய்ந்து மயிர்த் துவாரங்களை மூடிக்கொள்ளும். வேறு புதிது புதிதாக வெளிப் படுபவனவற்றை வெளியே விடுவதற்கு வழியில்லாது உள்ளேயே தங்கி தோலைப்பற்றிய பலவிதநோயை உண்டாக்கிவிடும். இல் லறத்தார்களுக்கு விடிவதற்குமுன்னும், துறவிகட்கு விடிந்து ஐந்துநாழிகைக்குள்ளும், ஸ்நானஞ்செய்வதவசியமென ஆன்றோ ரும் கூறியுள்ளனர். நம்மனுபவத்திலும், பிராதக்கால ஸ்நானஞ் செய்யும் அந்தணர்களும், இன்னும் மற்றோரும் எவ்வித நோயு மின்றி தேகதிடமாயிருப்பதையும் காண்கிறோம். இனி, ஸ்நா னஞ்செய்தவுடன் உலர்ந்த வஸ்திரத்தால் ஈரம்போக துடைத்து அவரவர்க்குறிய ஆடையணிந்து தன் இஷ்ட தேவதையைக் குறித்து தியானஞ்செய்துகொண்டு காலையில் 7 மணிக்குள் தற் காலம் தாறுமாறாகக்குடித்து தங்கள் வாழ்நாளையே வீணாகப் போக்கிக்கொள்ளும் குடியாகிய காப்பிக்குடியை விலக்கி பழய அன்னமோ அல்லது வேறு குளிர்ச்சியாயிருப்பவையையோ அவரவர் விருப்பத்திற்கேற்றவாறு அருந்தல் நலம். கூடியவரை அவ்வாகாரம் திரவரூபமாயிருத்தல் வேண்டும். பின்னர் அவரவர்க்குரிய தொழிலைக் கவனித்தல் பொருந்தும். அதிலும் அதிகமாக காலைவெய்யலில் நெடுநேரமிருத்தலும், உண்டவுடன் ஊக்கமாக வேலைசெய்தலும் ஒருவாறும் ஒவ்வாது. அதிகமாக தேகத்தை வருத்தின் தேகம் நாளடைவில் நலிவுற்று கெட்டுப் போகும். மத்தியானம் சுமார் 12-மணிக்குள் அவரவர் இயற் கைக்கொத்தவாறு அன்னம் உட்கொள்ளல் வேண்டும். அதிலும் சாப்பிடும்போது வேறெவ்வகையிலும் சிந்தையைச்செலுத்தா மலும், உட்கொள்ளும் பதார்த்தங்களை நன்றாகமென்று உமிழ் நீரோடு சேர்த்துவிழுங்குதல்முறை. இடையில் தண்ணீர் அருந்து வது உசிதமன்று அளவுக்குமிஞ்சினால் அமிர்தமும் விஷமாகும்

ஆதலின் அரைவயிறு ஆகாரமும், கால்வயிறு தண்ணீரும், மீதி கால்வயிறு காற்றும் உலாவும்படி விடவேண்டும். இன்றேல் ஜீரணவுறுப்புகள் கெட்டு ஜீரணிக்காது பல தொத்துநோய்கள் உற்பத்தியாகி உயிருக்கே ஆபத்தை விளைவிக்கும். இதுபற்றி யன்றோ நம் மூதாட்டி ஔவையும் 'மீதூண் விரும்பேலென்றாள். சாப்பிடும்போது கூடியவரை மௌனமாகப் புசித்தல் நலம் அவ்வாறு இயலாவிட்டாலும் அதிக பேச்சு வார்த்தையின்றி யிருத்தலேனும் நன்று. சாப்பிட்டானவுடன் நன்றாக வாய் கொப்பளித்துமிழ்தல் வேண்டும். அவ்வாறு செய்யாவிடின் சாப்பிட்டதின் எஞ்சியவை பற்களினிடையில் பதிந்து பற்களுக்கு கெடுதியையும், வாயில் ஓர்வித துர் நாற்றத்தையும் உண்டு பண்ணுகிறது. (வரும்.)

**S. V. G.** பாலன்,

திருவாரூர்.

## நட்பு

24-ம் பக்கத்தொடர்ச்சி.

நண்பராயிருந்து பிரிந்தால் ஒருவருக்கொருவர் சுபாவ குணங்களைச் சகவாசத்தால் அறிந்திருப்பாராதலின் இலகுவாய்த் தீங்கிழைத்துக்கொண்டு சடர்ப்படுவர். அவ்வாறு நீங்கி மறுபடி யும் சேர்ந்து கொண்டாலும், நெல்லினின்றும் உமியானது பிரிந்து மறுபடி சேர்ந்தாலும் பழைமையான தன்மையுண்டா காதுபோல் முதலிலடைந்த நட்பின் லட்சணங்களைப் பெறாத வராகி மாறுபட்டே நிற்பர். அதனாலன்றோ நம் ஔவைப் பிராட்டியார் "கூடிப்பிரியேல்" என்றார்.

பூவோடு சேர்ந்த நாரும் மணம் பெற்றுக் கமழ்வதுபோல் அறிவுடையாரோடு சேர்ந்த அற்பரும் பரிசுத்தராய் விளங்கு கிறார்கள். இரண்டு எதிரிகள் சண்டையிடும்போது ஒருவன் மற்றவனை நோக்கி "நீ இன்னாரோடு பழக்கமுள்ளவனாகலால் அவர்கள் முகத்துக்காக உன்னைவிட்டேன் இல்லாவிடில் நீ படும் பாடு வேறு" என்று சொல்வானாயின் மற்றவனுக்கு ஓர்வித உணர்ச்சியுண்டாகி அதனால் நாணமடைந்தவனாய்த் தானும் நற்

நட்பினரைப் போலாகவேண்டுமென்ற எண்ணம் தன் மனத்தி லுண்டாகிப் பெரியோரது நட்பையே ஆதாரமாகக்கொண்டு தன் தீயவிஷயங்களை அடியோடு தொலைத்து இயற்கையாகிய அறியாமை நீங்கவும் மனத்தூய்மையணுகின்றான். மனம் பரிசுத்தமடையவும் அவன் திரிகரண கைங்கரியங்களும் பரிசுத்த மானவைகளாகின்றன. ஆதலால் அவன் இம்மை, மறுமை, இருமையும் சுகமடைகிறான். தந்தையைப்போல் பிள்ளை இருக்குமாதலின் அவனது வம்சவழியார் யாவரும் தூயராவர். இதனால் அவன்றன் வம்சம் புகழோடும் நிலைபெற்று நிலவும். ஆதலினன்றோ ஓர் புலவர்,

"பொன்னில்லான் பூமியில்லான் புந்தியில்லானாயினும்
என்னில்லா னவனவனிருந்தவர் தம் நட்புளனேல்" என்றார்

சிநேகம் செய்தற்கு இன்னார் உரியராவர் என்று கண்டறிதலும் அவ்வாறு கண்டறிந்தும் அவரது நட்பைப்பெறுதலும், பெற்றாலும் அந்நட்பு குலையாமலிருக்கும்படிச் செய்யவேண்டிய உபாயங்களைச் செய்தலும், அன்னிலையில் நிற்றலும், அரிதாதலின் நட்பு செயற்கரிய செயலாகும். எல்லாம் வல்ல இறைவன் அருள்புரிவாராக சுபம்!

## ஞானசூரியன் வாழ்த்துப்பா.

(1) புவிவியன் பரப்பி னடுமணி யெனச்சீர்
பொன்னிநா டரிதினி விழைத்த
தவமதின் பயனோ! கமலையின் நலமோ!
தரணியி லுழலுமா ருயிர்கள்
பவவிருள் செகுப்ப வியற்றிய நோன்பின்
பயன்கொலோ! தமிழ்த்தவ மோமற்
றிவையெலா மொருங்கு திரண்டுமேற் றிம்பர்
எழுந்தவோ!. வறிகிலே னம்மா

(2) இலங்குமெய்ஞ் ஞானப் பேரின்பக் கடலி
னின்னமு தெளியவர்க் களிப்பான்
குலங்கொளுங் குறவர் சிறுமிநற் றேவ
குஞ்சரி இருவரை மணந்து

நலங்கொளு முருக னருளொரு வடிவாம்
நானிலத் துதித்ததூ ஞானன்
உலங்கொளோர் புயத்த னுலகெலாம் புகழு
முத்தம சற்குரு லயன்காண்

(3) கல்லுமின் குருகக் கவிபுகல் திறலான்
கதிதரு மெனதுசற் குருமா
மல்லலார் தவத்துக் கருணையானந்த
மணக்குணக் குன்றெழுந் தருவால்
வல்லமா ஞானு னந்தவா ருதியின்
மறையினுட் பொருள்கதிர் விரித்து
அல்வினைத் துறந்தே யறிவெனுங் கமலம்
அலர்த்துமா ஞானசூரியனே.

(4) விரும்பிய மனத்தோர் மதிமல ரலர்த்தும்
விரிகதிர் ஞானவெஞ் சுடரோன்
இரும்புவி நிலவ வெழுந்திடக் கனிந்த
வியன்மிகு மாதவத் துறையோன்
கரும்பினு மினிய மதுரவா சகத்துக்
கருணையானந்த சற்குருவும்
இரும்புகன் மனமுங் குழைந்திட அன்னோர்
இயற்றிய தமிழெலாம் வாழி.

(5) இரும்படி யவரைச் சூழுமஞ் ஞான
விடரிரு ளிரிந்திடச் சோதி
தரும்படி எழுந்த ஞானசூரியனித்
தரைமிசை யலகினுள் வாழி
பெரும்பெயர் கருணாநிதியெனு மச்சுக்
கூடமும் பீடுசூ ரியனை
விரும்பியேத் துனரும் அருந்தமி ழமுதும்
விளங்கிநீ டூழிவா ழியவே.

## விஞ்ஞாபனம்.

தாக்குமனத் துயராறுத்துத் தொண்டர்தமைத் தன்னடிக்கே
தடுத்தாட் கொள்ளும்
வாக்குமனத் தடங்காத தனிக்குமர னெஞ்ஞான்று
மருவி வாழப்
பூக்குமனக் கமலஅருட் கருணையா னந்தவப்
புகழோய் சேய
னேற்குமனக் குழைவுடனின் மொழிபேச முன்னென்னுன்
பியற்றி னேனே.

கல்வியங்கடலே! கருணையானந்த! கதிதரும் ஞானசற்குருவே! அடியேன் தமது திருவடித் தாமரைகளை மனத்திலும் சிரத்திலும் இருத்திப் பூரண அன்புடையனா யிறைஞ்சும் விண்ணப்பம், கருணைக்கடலாகிய தமது கிருபையடைந்த எளியனேன் பேற்றுப்பெருக்கைச் சொல்லவுமெளிதோ? ஐயனே! தங்கள் பாதப்போதையடைந்த நாயனேன்றன்னைச் சீர்ப்படுத்தல் நுந்தம் திருச்சமுகப் பரமேயாம். தேவரீர் திருவருளுத்தரவைத் தலைமேற்கொண்டு எளியேன் புன்மதிக்கெட்டியவாறு வரைந்த இவ்வியாசத்தினதும் வாழ்த்துப்பாக்களினதும் மாசுகளைந்து விளக்கி யேற்றுக்கொள்ளவேண்டுமாய்த் துதித்துத் தமது அருளிரந்து நிற்கும் அடிமை

ப. வீரப்ப தஞ்சவராயன்

## கலிமாவிளக்கம்.

ஆரணக் கலிமா தன்னை அரும்பொரு ளுடனீங் கோத
காரணக் கலிமா பாலுட் கொண்டகோ னருளால் பூவிற்
பூரணக் கலிமா வேறும் புனிதர்கள் தமக்கு முன்னே
காரணக் கலிமா ஹக்கைக் கருத்தினுள் இருத்தி வாழ்வாம்

சகோதர சகோதரிகளே!

இவ்வுலகில் அவரவர்க்குத் தெரிந்த கல்விகளைத் தான் அநுபவித்ததுபோல்எனையசகோதரர்களும் அநுபவிப்பதற்காகத் தமக்குத் தெரிந்ததை மறைக்காமல் நான்பெற்றபேறு பெறுகஇவ் வையகம் என்னும் பெரியோர் வாக்கியத்திற்கிணங்க விளங்கச் செய்யவேண்டியது கடமையேயாம். அவ்வாறு தமக்குத்தெரிந்த ஒன்றை விளங்கச்செய்ய முயலும்போது பலர் அபிப்பிராயம் பல விதமாக இருப்பதால் அபிப்பிராயபேதம் உண்டாகி குதர்க்கம் ஏற்பட்டுவிடுவது பிரத்தியட்சமாதலால் மவுனம் கலகநாசம் என்பதுபோல் தான் தெரிந்தஒன்றைத் தன்னோடாவது அல்லது தன் மனதுக்கிசைந்தவர்களோடாவது ஒடுக்கிக்கொண்டு மவுனமாகப் போய்விடுவது மிகவும் நல்லதே. ஏனெனில், ஏதாவது இரகசியமாயுள்ள ஒரு விஷயத்தைப்பற்றிக் காருண்யமேலீட்டால் எழுதவோ சொல்லவோ முயன்றால் சில முஹம்மதிய சகோதரர்கள் இன்கார் (துவேஷம்) செய்யவும் பத்துவாக்கள்

(கண்டனம்) பிறப்பிக்கவும் முன்பின் யோசியாமல் முன்வந்து விடுகிறார்கள். மதம் எல்லாருக்கும் பொதுவானதுதானே ? அந்த மனிதன் அப்படிச்சொல்வதின் காரணமென்ன. அதைக்கேட்டறிவோம் என்று அமைதியோடு கேட்க முயற்சிக்காமல், இவனுக்கு என்னதெரியும் ? இவன் ஏன் இப்படி எழுதினான் ? இவன் காபிராகிவிட்டான் ! என்பதுபோன்ற வாக்கியங்களைச் சரமாரியாகப் பிரயோகஞ்செய்துவிடுகிறார்கள்.

இதற்குத் திருஷ்டாந்தமாக:—முகையதீன் அறபி, மன்சூர் கல்லாசு றகுமக்குல்லா முதலான ஆரிபீன்களுடைய தேவாமிர்த வாக்கியங்களையெல்லாம் அக்காலத்து முஸ்லீம் என்பவர்கள் பழித்துவந்தார்கள். அதனால் அந்தவாக்கியங்கள் பகிரங்கத்திற்கு வராமல் அந்தரங்கமாகவே போயிற்று. அதைத் தேடித் தேடி எங்காவது இருந்துகிடைக்காதா? என்று இப்போதுள்ள உலமாக்களும் ஆலீம்களும் தேடியலைகிறார்கள்.

இந்தக்காலத்திலும் அதுபோலவே அனேக ஆரிபீன்களுடைய சொல்லையும் செயலையும் பழித்தும் அனேக புத்தகப்பிரசுரங்கள் நடந்துவருகிறது. சிலர் முணுமுணுத்துக் கொண்டும் ; சிலர் அவலை நினைத்து உரலை யிடித்துக்கொண்டும், வெறுவாயை மென்றுகொண்டும் குற்றத்தையேநாடித்தேடி அலைகிறார்கள். இவ்விதமான சந்தர்ப்பத்தில் சில முஹம்மதிய சகோதரர்கள் இந்த ஞானசூரியன் பத்திரிகையின் வாயிலாக முதல் சஞ்சிகையிலேயே கலிமா விஷயத்தைப்பற்றி எழுதும்படியாகச் சொன்னார்கள். அதற்கு நான்

கலிமா என்பதையும் அதைப்போன்ற விஷயத்தைப்பற்றியும் முன்னுள்ள பெரியோர்கள் எழுதிவிட்டு அவர்கள்பட்ட பாடுகள் அதிகம். அதற்காகத்தான் ஒரு மதத்தையும் சாராமல் வேதாந்தபாஸ்கரன் முதலான நூற்களை இயற்றினேன். அதிலுங் குற்றமிருக்கிறதா என்று தேடிக் கூறுவதற்குச் சில புலிகள் அலைகிறது. ஆதலால் என்னை அம்பலத்தில் ஏன் இழுத்துவிடப் பார்க்கிறீர்கள் என்று பலதடவை சொல்லியும் அவர்கள் பிடிவாத

மாக தாங்கள் எழுதத்தான்வேண்டும் என்று வற்புறுத்துகிறார்கள். ஆனால் இவர்கள் வற்புறுத்துவது உள்ளபடி நன்மையை நினைத்தோ அல்லது அம்பலத்தில் இழுத்துவிட்டு வேடிக்கை பார்க்கத்தானோ என்பதைக் கடவுள்தானறிவார். அஃதவ்வாறிருக்க எனக்குத் தெரிந்தவரையில் எழுதுகிறேன் நீங்கள் வண்டினத்தைப்போல் உங்களுக்கு வேண்டியதை எடுத்துக் கொள்ளுங்கள். ஆனால் தேனைத்தேடுங்கள்.

## கலிமா விபரம்.

கலிமாவானது 5. அதில் 1-வது கலிமாதையிபு. 2-வது ஷஹாதத்து. 3-வது தம்ஜீது. 4-வது தௌஹீது. 5வது றத்துல்குபிர். என்பவைகளாம். அவற்றுள் பிரதானமானது முதற் கலிமாவாகிய தையிபு என்பதாம். அது

"லா இலாஹ இல்லல்லாஹு முஹம்மதுர் றசூலில்லாஹி" என்னும் ஒப்பற்ற பிரணவ ஞான மஹாமந்திரமாம். அது தௌராத்து, சபூர், இஞ்சில், புறுக்கான் என்னும் வேதங்களில் விகசிதமடைந்த புறுக்கானுல் அலீம் என்னும் (*) நாலாவது வேதமாகிய குர்ஆன்ஷரீபுஎன்னும் பாற்கடலைக் கடைந்து வெண்ணெய்யாக திரட்டிவைக்கப்பெற்றது இந்தக்கலிமா மகாமந்திரம். இந்தக்கலிமா என்னும் வெண்ணெய்க்கட்டியை உருக்கி நெய்யாக்கி உபயோகப்படுத்திக்கொள்வதற்கு குரு ஷெய்குமார்களைத் தேடி அறிந்துகொள்ளவேண்டியது ஒவ்வொரு முஸ்லீம்களின் கடமையாகும்.

கலிமாச்சொல்லி ஈமான்கொண்டதோடு நின்றுவிடாமல் கலிமாஎன்பதின் பொருள் என்னவென்று தெரிந்து அதன்படி அமல் செய்தாலல்லவா கலிமாவை அறிந்தவர்களாவார்கள்.

லாயிலாக இல்லல்லாஹு முஹம்மதுர் றசூலில்லாஹி என்று சொல்லும் வாசா கயிங்கரியத்தினால் மாத்திரம் இஸ்லாத்

(*)நாலாவது வேதம் என்றால் சிலர் இருக்கு, யசுர், சாமம், அதர்வணம் என்பதில் நாலாவதாகிய அதர்வணவேதம் என்று நினைக்கிறார்கள் ஆகையால் நாலாவது வேதமென்பது இவ்விடத்தில் புறுக்கான் வேதமென்பது கவனிக்கத்தக்கது.

திற்குள்ள பதவியைப் பெறமுடியாது அப்படிப் பெறுவதாயிருந்தால் சாதாரணமாக கலிமாவைச் சொல்லிக்கொள்ளும் எல்லா மதஸ்தர்களும் கிளி, மைனு, முதலிய பட்சிகளும், கிராமபோன் பாட்டுப்பெட்டிகளும், காமில் என்னும் பட்டமும், பதவியும் அடையவேண்டுமல்லவா? அவ்வாறில்லாததால் அதில் ஒரு பெரிய ரகசியம் இருக்கிறது என்பதை ஆழ்ந்து யூகிக்கவேண்டியது அத்தியாவசியம். ஏனென்றால், கலிமாவின்பொருளை நன்குணர்ந்தவர்களைக் காமில் (சற்குரு) என்றும், உணராதவர்களைக் காபிர் (அஞ்ஞானி) என்றும், நமது ஆன்றோர்கள் திருவாய் மலர்ந்திருக்கிறார்கள். ஆகையால் மேற்கூறிய காமில் என்னும் பதத்திற்கு நாம் இலாயக்காக இருக்கிறோமா? காபிர் என்பதற்கு இலாயக்காக இருக்கிறோமா? என்பதை நாமே நம்மைப் பரிசோதித்தல் வேண்டும். பிறரைக்கொண்டு சோதிப்போமாயின் நம்மைக் காமில் என்னும்போது இன்பமும், காபிர் என்னும்போது துன்பமும் உண்டாகுமாதலால் நம்மையே நாம் பரிசோதிக்கவேண்டும்.

## கலிமாப்பொருள்.

லாயிலாக வணக்கத்திற்குப் பாத்திரவான் யாருமில்லை இல்லல் லாஹு அல்லாஹுத்தாலாவைத்தவிர முஹம்மதுர் றசூலுல்லாஹி முகம்மது என்பவர்கள் அல்லாவுடைய உண்மைத் திருத்தூதர் என்பது லாஹிறு (வெளிப்) பொருள். எந்த வஸ்துவுக்கும் அந்தரங்கப்பெயர் வேறாகவும், பகிரங்கப்பெயர் வேறாகவுமிருக்கிறது. அதையே அண்டபிண்டம் என்று சொல்வதுமுண்டு ஆகையால் அதன் அந்தரங்கத்தைக் கூடியவரையில் சுருக்கிக் கூறுவாம்.

தேத்தே துங்கர் வாலே என்றமெட்டு.
இராகம் மால்.கோஷ் தாளம் ஆதி.

பல்லவி,

கலிமாப் பொருளறிந் தோரே—தவக்
காமி லாகிய பீரே—அவ்வல் (கலி)

சாணுநு பல்லவி.

(1) கலிமா அறுநான் கெழுத்து அதிற்
காணும் ஓர் நெடில் எழுத்து அதைக்
கண்டோர் உன்னிடம் வழுத்து வதைக்
கவனமாய் நெஞ்சில் அழுத்து—அவ்வல் (கலி)

(2) அலிமாமா சொன்ன வாக்கு குரு
அஹதி யத்துடைய போக்கு தன்னை
அறிந்து பின்குபிர் நீக்கு ஒளி
ஆதலால் உன்னை நோக்கு—அவ்வல் (கலி)

(3) குன்கு தாத்தில்விளை யாடு தன்
குறிப்பையறிந்து படு பாடு திருக்
கன் சுல் மகுபியா தோடு அதைக்
கண்டா லல்லவோ வீடு—அவ்வல் (கலி)

(4) கலிமா என்பது ஒரு சொல் பெருங்
கருணை யானந்தத் திரு அமல் அருள்
ஒலிமார் சென்ற வழி நில் மணி
முத்து நாயகம் உரை கல்—அவ்வல் (கலி)

(இன்னும் வரும்) மணிமுத்து நாயகம்,
வே. பா. ஆசிரியர்.

## ஈ கை.

அன்பார்ந்த சகோதர சகோதரிகளே!

ஈகை யென்னும்மொழி கைவிகுதி பெற்றுக் கொடுத்தல் என்று பொருள்படும்தொழிற்பெயராம். ஈகையெனினும் கொடை யெனினும் ஒக்கும். எளியவரென இரந்து வந்தோர்க்கு இல்லை யென்னாது உள்ளன்போடும் தத்தமாலியன்றவளவு கொடுத்து உதவுதலே ஈகையாம். அவ்வகை யீகைத் தன்மையுடைமையே இம்மையிற் புகழையும், மறுமையிற் சுகத்தையும் விளைக்கும்

"இன்றைக் கிருந்தாரை நாளைக் கிருப்பாரென்
றெண்ணவோ திடமில்லையே"

என்றுங்கு நித்தியமில்லாத இவ்வாக்கையையும், "ஆறிடுமேடு மடுவும் போலாஞ்செல்வம்" என்றபடி அநித்தியமாய இச் செல்வத்தையும் அடையப்பெற்றார் சிலர், அம்பொன்வைப்பின்

மீதிருந்தும் அல்லற்படுவதெனத் தாம்பெற்றபொருளைக் குவியக் குவியலாய்ப் பெட்டியிலும், சட்டியிலும் புதைத்துவைத்துத் தானும் உண்ணாமல், பிறர்க்கும் ஈயாமல் செல்வச்செருக்கென்னும் கொடுநோய்கொண்டு கண் தெரியாமலும், காது கேளாமலும், வாயடைந்தும், அப்பொருளை எங்கே கள்வர் கவர்வரோ? கொடுங்கோன் மன்னர் கொள்வரோ? தாயமாக்கள் வெளவுவரோ? தீ, முதலியவற்றால் அழிவுறுமோ? என்னும் அச்சமே மனதிற் குடிகொண்டு உளத்தையும் உடலையும் வருத்தவும் பெரியோர்.

"நாயாய்ப் பிறந்திடினல் வேட்டையாடி நயம்புரியும், தாயார் வயிற்றினராய்ப் பிறந்து பின் சம்பன்னராய், காயாமரமும் வறளாங்குளமுங் கல்லாவுமென்ன, வீயாமனிதரை ஏன் படைத்தாய் கச்சியேகம்பனே" எனவும், சவம், கழுதை, கல், பதர் முதலியவற்றிற்கும் ஈடு சொல்லொணாத வுலோபியரெனவும், பொன்காத்த பூதமெனவும், பல்வாறு வசைகூறவும், பெறற்கரிய இம்மானிட ஜனனத்தாலும், உறற்கரிய இச்செல்வத்தாலும் அடையும்பேற்றில் இம்மியும் அடையாதாராய் இழிசொல்லையே யேற்று வீணே மரிப்பர்.

இன்னும் சிலர் மாடு, வீடு, மனைவி, மக்களாதிய சதமென்றும், நாயோ, நரியோ, தீயோ, மண்ணோ வுண்ணப்போம் இச்சரீரத்தில் அழகுறப் பட்டாடை முதலிய சுற்றியும், காலை போஜனம் (Break-fast) மத்யான போஜனம் (Dinner) இடையிடையே சிற்றுண்டி (Luncheon) பிறகு இரா போஜனம் என ஓர் வரையறையில்லாமல் பலதரமும் பருத்திப்பொதியெனத் தம் வயிற்றை நிறப்பியும், சந்தனம், புனுகு முதலிய வாசனைதிகளையணிந்தும், கண்டதேகாட்சி கொண்டதேகோலம் என உண்பதும், உறங்குவதுமே வேலையாக இருந்தும், அறிந்தோர் வந்து ஈகையைப் பற்றிச் சிலாகித்துப் பேசுவாராயின், "தனக்கு மிஞ்சியன்றோ தானமும் தருமமும்" என்று தமக்கான கட்டுரைகளை அழுத்தம் திருத்தமாய்க் கூறுநிற்பர்.

(இன்னும் வரும்) ப. வீரப்ப தஞ்சவராயன்.

புலிவலம் ஸ்ரீ தெண்டாயுதபாணிக் கடவுள்மீது
ணிமுத்துநாயகம் என்னும் காரணப்பெயர் புனைந்த
னபூபதி, ஸ்ரீ கருணையானந்த சுவாமிகள்
திருவாய்மலர்ந்தருளிய

## திருப்பாவணி என்னும்

# கந்தப்புகழ்.

இதில் நவீன நாகரீக பார்ஸி வர்னமெட்டுகளமைந்த இராக தாளங்களுடன் பரமானந்தத்தைத் தரும் கீர்த்தனங்கள், தேகப் பரவசஞ்செய்யும் பல்லவிகள், கல்மனமும் கரைந்துருகக்கூடிய அநு பல்லவிகள், பக்திரசக்கடலைப்புகட்டி ஆனந்தபாஷ்பம சொரியச்செய்யும் சரணங்கள், கெம்பீரமும் சோகரசமும் பொருந்திய ஜாவளிகள், சொற்சுவை பொருட்சுவை நிறைந்து ததும்பி வாசிப்போர் உள்ளத்தை கொள்ளைகொண்டு என்ன வாக்கு! என்ன அருமை! என்று வியக்கும்படியான விருத்தங்கள் முதலியவை நிறைந்திருக்கின்றன. ஒவ்வொரு பாடலையும் பாடுபவரும் கேட்பவர்களும் திடுக்கிட்டு அதிசயித்து மயிர் கூச்சலடைந்து ஆஹா! ஆஹா!! பலே! பேஷ்! என்று சிரக்கம்பம் கரக்கம்பம் கொண்டு மெய்மறந்து பத்தி முத்தி அடையக் கூடிய விதமாக அமைந்துள்ளது.

| | |
|---|---|
| முதற்பாகம் அணா 0—2—0 | 2-ம்பாகம் அணா 0—2—0 |
| முருகர் தியானம் அணா 1. | வேதாந்தபாஸ்கரன் ரூ. 1. |

### கருணாநிதி

## ஜீவகாந்த தீர்த்தம்.

இந்தத் தீர்த்தமானது சாதாரணமாய் ஆறு, குளம், ஏரி, கிணறு முதலியவைகளில் உள்ளதல்ல. நமது ஆன்றோர்கள் அனுபவித்து கையாண்டுவந்த முறைப்படி தை மாசி முதலான காலங்களில் பெய்யும் பனிநீரை பளிங்கிப்பாத்திரங்களில் வாங்கி அதில் ஒரு மண்டலம்வரை மெஸ்மெரிஸ சக்தியால் ஜீவகாந்தப் பவரைச் செலுத்தி ஜுரம், வயிற்றுவலி முதலிய எல்லாவியாதிகட்கும் பரமசஞ்சீவியாகத் தயாரிக்கப்பெற்றுள்ளது. ஜீவகாருண்யத்தை முன்னிட்டே குறைந்த விலை ஏற்படுத்தலாயிற்று.

ஒரு அவுன்சுபாட்டில் 1-க்கு 0—4—0
டஜன் ஒன்றுக்கு 2—8—0
காலரா மாத்திரை பாட்டில் 1-க்கு 0—3—0

விலாசம் :—

மானேஜர்,

கருணாநிதி வர்த்தக சாலை,

ஞானசூரியன் ஆபீஸ்,

விஜயபுரம், திருவாரூர், S. I. Ry.

# ...ங்களே! இன்னும் தூங்குகிறீர்கள்?

# வேதாந்த பாஸ்கரன்

## என்னும் நமது மெய்ஞ்ஞான சூரியன் உதயமான பின்னரும் தூங்குவது

## ஞாயமா! ஞாயமா!!

அஞ்ஞான நித்திரை நீங்கி! மெய்ஞ்ஞான விழிப்படையுங்கள்!!

இவ்வுலகின்கண் ஆத்மலாபம் அடைய அனேக பக்குவிகள் எண்ணியும் (தூணைக் கட்டிப்பிடித்துக்கொண்டு விடமாட்டேனென்குதே! விடமாட்டேனென்குதே!! என ஓலமிடுபவரைப்போல்) பிரபஞ்சவாழ்க்கையில் அதிகமாக மனதை நுழைத்துக்கொண்டு ஐயோ! பிரபஞ்சம் விடமாட்டேனென்குதே? என்று வருந்துகின்றனர். தூணை நாம் பிடித்துக்கொண்டு விடமாட்டேனென்கிறோமா? தூண் நம்மைப் பிடித்துக்கொண்டு விடமாட்டேன் என்கிறதா? என்றறிந்தவர் சிலரே. ஆகலின் காட்டிலிருப்பினும் நாட்டிலிருப்பினும் கமல நீர்போல் பற்றற்றிருக்க வேண்டுமேயன்றி, மலை, குகை, முதலானவைகளில் வசிக்கவேண்டுமென்கிற நிர்ப்பந்தமில்லை.

மரணமாவதோ இன்ன நேரமென்று காணுவது அசாத்தியமாயிருக்கிறது. அறுப்பதற்கு கத்தி தீட்டுகிறபோதும் ஆடு அசைபோடுவதுபோல் காலமெல்லாம் கதை, காவியம், பகடி, பரிகாசவேடிக்கை விளையாட்டுகளில் பொழுதைப் போக்கிவிட்டு சாகப்போகிறகாலத்தில் சங்கரா! சங்கரா!! என்று பிதற்றுவதிற் பயனில்லை என்பதை ஆலோசித்து ஆத்மலாபம் பெற முயலுங்கள்.

தேன்வண்டானது தானுந் தேனையுண்ணாமல் தேனை எடுக்க வருபவரையுங் கொட்டுகிற தன்மைபோல் இவ்வுலக வாழ்வையே சதமென நினைத்து, நீங்கள் ஆத்மலாபம்பெற முயலாவிடினும் முயற்சிப்பவர்களை தடுக்காதிருங்கள். ஆத்மானுசந்தானம் பெறுவதற்கு அருமை பெருமைவாய்ந்த நமது வேதாந்த பாஸ்கரன் ஓர் சிறந்த வழிகாட்டியாகும், ஏனெனில் சிலர் எழுதிய சாடு முரடான வசன நடைகளைப்போலின்றி நளினமான இனிய செந்தமிழ் வசன நடையில் பன்னூல்களிலிருந்தும், மேற்கோள் தீட்டி மிக அழகாயுஞ், சமரசமாயும் எழுதப்பெற்றிருப்பதால் முஹம்மதியர்கள், இந்துக்கள், கிறிஸ்தவர்கள் முதலிய எல்லா மதஸ்தர்களும் வாங்கி வாசிக்கற்பாலதே. இந்நூலை வாசிக்காதவர்கள் வாஸ்தவத்தில் துர்ப்பாக்கியர்களே! தமிழ்க்கல்வி குன்றிய இக்காலத்தில் இத்தகைய நூல் வெளி வந்துலாவுவதானது தமிழ் நாட்டுக்கு எதிர்பாராத ஓர் பெரிய அதிர்ஷ்டமென்றே சொல்லவேண்டும்.

வேதாந்த பாஸ்கரன் விலை ரூ. 1—0—0

யோகரகசியம் (ஒருபாகம்) விலை அணா 0—6—0

விலாசம்:—மானேஜர் கருணாநிதி வர்த்தகசாலை, ஞானசூரியன் ஆபீஸ்,

விஜயபுரம்—திருவாரூர். S. I. Ry